# தினசரி வழிபாட்டு முறை



# 12. அருட்குருமூர்த்தி துதி

சீர்தருகும் பரமானந்தவடிவமாய்
சின்மயனே - ஜெகந்நாதா
சிந்தை அடங்கிட சிவபதம் அளித்தருள்
தேசிகனே - குருநாதா 1

என்றும் இல்லா உலகை ஏன் எனக்கு
காட்டியே ஏங்க வைத்தாய் - ஜெகந்நாதா
நான் அன்றி வேறில்லா தானாகி நின்றிட
நலமெனக் கருள் - குருநாதா 2

காரணனாய் நின்று கஷ்டஸுகம் தந்து
கலங்கவிட்டாய் - ஜெகந்நாதா
பூரணனாய் உன்னில் கலந்திடச் செய்
பரிபூரணனே - குருநாதா 3

அந்தகன்போல யானும் அலைந்தலைந்தும்
உன்னை அடைந்தறியேன் - ஜெகந்நாதா
பந்தபாசங்கள் அற்று பரமாய் நிறைந்திடச் செய்
பராபரனே - குருநாதா 4

தில்லைச் சிதம்பரமாம் எல்லையில்லா
வெளியில் நில்லா நடம்புரியும் பாதா
சொல்லாமல் சொல்லி என்னை சொரூபத்தில்
சேர்த்து வை சேதனனே - குருநாதா 5

மாயை என்ற பேயை மதித்திடச்
செய்தென்னை மயங்கவிட்டாய் - ஜெகந்நாதா
பாயும் சுவாஸம் எல்லாம் பரத்துடன் சேரச்செய்
பரமேஸ்வரனே - குருநாதா 6

மதிமயமாய் என்னில் சதிகள் பல
செய்யும் ஶாஶ்வதனே - ஜெகந்நாதா
பசுபதி பாசம் என்ற திரைகள் அறுக்கச்செய்
பஶுபதியே - குருநாதா 7

மான்மழு வேந்தியே மானிலம் காத்து
நின்ற - மஹேஶ்வரனே - விஶ்வநாதா
நான் என்ற அகந்தைவிட்டு தானாகி
நின்றிடச்செய் தாண்டவனே - குருநாதா 8

அண்ட புவன மெல்லாம் ஆண்டருள்
செய்யுமென் ஆண்டவனே - ஜெகந்நாதா
கொண்டல் போன்ற மும்மலங்களை
நீக்கச் செய் சண்டமாருத - குருநாதா 9

ஜீவேஶ்வர ஜெகத்தாய் இஹபரம்
இரண்டுமாய் ஏகனாய் நின்ற - ஜெகந்நாதா
ஜீவ ப்ரஹ்மைக்ய ரஹஸ்யம் தெளியச்
செய் ஜீவபண்டிதனே - குருநாதா 10

பூதம் ஐந்தால் ஆன கோசங்கள் ஐந்தினுள்
ஜோதியாய் நின்ற - ஜெகந்நாதா
ஸாதகத்தால் பஞ்ச கோசங்கள் அறுத்துன்னை
சந்திக்கச்செய் - குருநாதா 11

பொறிபுலன்கள் தந்து பேரறிவைக் குறைத்து
பேயனாக்கி வைத்தாய் - நாதா
அறிதற்கு அரிதாகும் ஆறாம் அறிவை
தந்து ஆதரித்தருள் - குருநாதா 12

கண்ணுக்குக் கண்ணாய் கண்ணின்றிக் காணும்
உன்னைக் காண்பது எங்கண் - ஜெகந்நாதா
காந்தம் இரும்புபோல் கவர்ந்தென்னை
விடாமல் கலந்திடுவாய் - குருநாதா 13

கெஞ்சியும் கொஞ்சமும் நெஞ்சமிரங்கலையோ
அஞ்சாதே என்றருள் - ஜெகந்நாதா
வஞ்சனையால் வந்த ஸஞ்சிதம் போக்கிவை
குஞ்சிதனே - குருநாதா 14

அகமதில் நீ இல்லையோ அகந்தை ஏன்
வளர்த்திட்டாய் - அச்சுதனே - ஜெகந்நாதா
சுகக்கடல் பொங்கிட சொல்லுணர் வடங்கிட
சுயம்பு ஆக்கிவை - குருநாதா 15

துப்பறிவில்லாத இப்பிறப்பெனக்
கீய்ந்த ஒப்புயர்வற்ற - ஜெகந்நாதா
ராப்பகல் இல்லாத வெட்டவெளியில்
என்னை ரமித்திடச் செய் குருநாதா 16

ஈன்றிடும் அன்னையிற் பெரிதருள்
புரிவோய் இதுவோ உனதருள் - நாதா
மேன்மேலும் ஆசையை மேலிடச்
செய்யாதுன் தன்மை எனக்கருள் - குருநாதா 17

வரும் பிறவிகள் மாற்றித் தரும்
கர்மங்களைப் போக்கிப் பெரும்பதம் எனக்கருள் - நாதா
அருட்பெரும் ஜோதியாய் அமர்ந்திடச்
செய் என் குருபரனே - ஞான வரதா